Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 03

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. “தப்பிய கந்தை பீதாம்பரம் போல்” என்பதில் பீதாம்பரம் என்பது
   i. புதியஆடை ii பழையஆடை iii பட்டாடை iv கந்தலாடை
2. “நாய் அனையர் கேண்மை கெழீகொளல் வேண்டும்” என்பதில் கேண்மை என்பதன் எதிர்ப்பதம்
   i. உறவு ii பகைமை iii நட்பு iv தெளிவு
3. “கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கு” என்பதில் பிணக்கம் என்பதன் எதிர்ப்பதம்
   i. இணக்கம் ii பழக்கம் iii முரண்பாடு iv பிரச்சினை
4. “இராதா கறுப்பு நிறம்கொண்டவள்” “இராதா அழகானவள்” என்ற இருவாக்கியங்களையும் இணைக்க பொருத்தமான இணைப்பிடைச்சொல்
   i. எனவே ii ஆனால் iii ஆகவே iv உம்
5. பின்வருவனவற்றுள் நிரப்பித்தொடராய் அமையாதது
   i. என ii என்று iii எனவே iv என்பது

பகுதி 2

01. பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக
1. நீதிப்பாடல்கள் என்றால் என்ன?
2. பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியம் ஒன்றினை எழுதுக
3. “இருப்பினும்” என்ற இணைப்பிடைச்சொல் அமையுமாறு கூட்டுவாக்கியம் ஒன்றினை உருவாக்குங்கள்
4. “நான் நாளை யாழ்ப்பாணம் போகின்றேன்” என்ற வாக்கியத்தில் இடம்பெறும் வழுவை இனங்கண்டு அதனை வழுவற்ற வாக்கியமாக மாற்றி எழுதுக
5. “உப்பிலா கஞ்சியினை…” என ஆரம்பிக்கும் பாடலில் இடம்பெறும் முதுமொழியை எழுதுக

02. பின்வரும் பாடலை படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக

1. கற்றார் முன் கல்வியுரைத்தல் மிகஇனிதே
   மிக்காரைச் சேர்தல் மிகமான முன்இனிதே
   எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
   எத்துணையும் ஆற்றல் இனிது

i. மேற்குறித்த பாடல் இடம்பெற்ற நூலை எழுதியவர் யார்?
ii. இனியவை நாற்பது கூறும் இனியவை மூன்றும் எவை?

2. “பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி பொங்கி
   எழுந்த கொழும் கனல் என்ன எழுந்தார்..”

i. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியத்தின் பெயர் யாது? கட்டுரையின் பெயர் யாது?
ii. அவ்விலக்கியத்தில் யாருடைய எழுச்சி கூறப்படுகின்றது? அதனை கட்டுரையாசிரியர் யாருடைய எழுச்சியை எடுத்துரைக்க பயன்படுத்தினார்?
iii. இப்பாடலில் இடம்பெறும் அணியை இனங்கண்டு விளக்குக